www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

## Thamil Eelam Liberation Organization



தங்கத்துரை
தலைவர்

விடுதலைப்போரிலே களமாடி வீரமரணமெய்த புறப்பட்ட எமது இயக்கத்தின் தளகர்த்தர்கள் **1983** ஜூலைத்திங்கள் 25-ம் நாள் சிங்கள சிறீலங்காவின் சிறைக்கூடத்தில் நடந்த கோடூரமான படுகொலைக்கு ஆளானர்கள்

# வீர அஞ்சலி

வெலிக்கடைச் சிறைச் சாலையிலே வெங்கொடுமைச் சாக்காட்டை சந்தித்த விடுதலைப் போராளிகள் - தமிழ் ஈழத்தில் ஆயுதப்புரட்சியின் முன்னோடிகள்

தங்கத்துரை, குட்டிமணி, நடேசதாசன், ஜெகன் தேவன், சிவபாதம், சிறீக்குமார், குமார், குமாரகுல சிங்கம், மரியாம்பிள்ளை இன்னோரன்ன மறவர் பலர்

இவர்களைப் பச்சையாகப் படுகொலை செய்த நிலையில் நாம் கூறுரைக்கும் வேளை கோடானு கோடித் தமிழ் மக்களின் உள்ளங்களிலே கொலுவீற்றிருக்கும் இந்த வீர மறவர்களை அறிமுகம் செய்ய வேண்டியதும் அவசியமோ?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## • தங்கத்துரை எனப்படும் நடராஜா தங்கவேல்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவன் மட்டும் அல்ல, இவன் ஒரு தத்துவமும் கூட. தமிழ் ஈழ மண்ணில் அரச படைகளின் அட்டூழியத்தாலும் அராஜகத்தாலும், அடக்குமுறையினாலும், இளைஞர்கள் மத்தியில் மூண்டெழுந்த விடுதலைக் கிளர்ச்சிக்கும், ஆயுதப் போருக்கும் முன்னோடி. "நாம் வன்முறைமீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்லர்'' — என்று நீதிமன்ற விசாரணையின்போது இந்த மறவன் கூறிய வார்த்தைகள் சரித்திரத்தில் சாசுவதம் பெற்றவை,

அமைதியும். அடக்கமும், அன்பும், பண்பும், உறுதியும் அணிகலன்களாக அமையப் பெற்ற இந்த லட்சிய மறவன் சிங்கத் தமிழ் இளைஞர்களுக்கெல்லாம் " தங்கண்ணா " ஆயினன். வாதத் திறமையும், பேச்சாற்றலும் மிக்க இந்த அருமகனுக்கு ஒரு திருமகன் - பெயர் கரிகாலன்.



குட்டிமணி
*செயலதிபர்*

## • குட்டிமணி *என்கின்ற* செல்வராஜா யோகச்சந்திரன்

தலைவன் கூறிய தத்துவங்களையெல்லாம் செயலிலே சித்தரித்த தளபதி. சிங்கள போலீஸ் - இராணுவ இனவெறியரின் சிம்மசொப்பனம் இவன். இதனால் இந்த இனக்கொலைஞரின் கோரத்தாக்குதலுக்கும் கொடுமைகளுக்கும் முழுமையாக இலக்கான விறலோன். இவனது வெற்றித் தடந்தோள்களிலே வீரம் விளையாடியது. இவனது வலிய தடக்கைகளிலே யந்திரத் துப்பாக்கிகள் குறிதப்பாது விளையாடும்.

தலைவன் காட்டிய நெறி தவறியதில்லை; வைத்த வேட்டுகள் குறி தவறியதில்லை. சிங்கள நீதிமன்றம் மரண தண்டனை விதித்தபோது கூண்டிலே நின்று ஆர்ப்பரித்தான். " தூக்கிலே தொங்கியபின் என் கண்களை விழியற்ற தமிழ் இளைஞனுக்கு வழங்குங்கள். அந்த கண்கள்மூலம், மலரப் போகும் தங்கத் தமிழ் ஈழத்தை தரிசிக்க ஆசைப்படுகிறேன்'' என்றான். இதனால், சிறைச்சாலையில் சிங்கள வெறியர் அவன் உயிருடன் இருக்கும் போதே அவன் கண்களை பிடுங்கினர். வீரவுரை நவின்ற நாவை அறுத்தனர். ஏ அஞ்சா நெஞ்சமே! உன் மறுபெயர்தான் குட்டிமணியா? இவன் வீரத் திருநாமம் விளங்க மதிவண்ணன் என்ற மகனும் மதுமதி என்ற மகளும் உள்ளனர்.

## • வைத்திலிங்கம் நடேசுதாசன்



''செனெட்டர்'' என்ற சிறப்பு பெயர் தாங்கிய இந்தச்சிங்கம் முறுக்கேறிய உடலும் நறுக்கான பேச்சும் கொண்டவன். இயக்கத்தின் முன்னோடி நிறுவனர்களில் ஒருவர். இயக்கத்திற்காகவும் இனவிடுதலைக்காகவும் சொத்து சுகங்களையும், பந்தபாசங்களையும் விட்டெறிந்துவிட்டு குடும்பத்தையும் விட்டு வெகுதூரம் விலகி வந்தவர். ஆனையிறவு இராணுவ முகாமில் சொல்லொணாச் சித்திரவதைகளைத் தாங்கி தழும்பேறிய இவர் துரோகிகளைத் தொலைப்பதில் முனைப்புடன் செயற்பட்டவர்: மணமாகாதவர்.

www.tamilarangam.net

## ஜெகநாதன்



என்கின்ற

## ஜெகன்

● தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளையமகன். செயலதிபர் குட்டிமணியுடன் இயந்திரத் துப்பாக்கியும் கையுமாக இந்த இளஞ்சிங்கம் களம் கண்ட பல வேளைகள். மகாபாரதப் போரில் வீமனும் அபிமன்யுவும் இணைந்து களத்திலே பகைவர்களின் வியூகங்களை உடைத்து முன்னேறிய பாங்கையொத்தன. வயதிலே சின்னவன். வேட்டுகளை குறிவைப்பதில் மன்னவன்; தலைவர், செயலதிபரிடம் பெற்ற பயிற்சிகளை இயக்கத்து இளைஞர்களுக்குப் பயிற்றுவித்தவன். உடல் வலிமையாலும், மனோவலிமையாலும் பொலிஸ், இராணுவத்தினரின் கைகளிலிருந்து பல தடவைகள் தப்பியவன்,

''நீதிபதியவர்களே ! என்னைத்தான் தூக்கிலிட முடியும். மலரப் போகும் தமிழ் ஈழத்தை தூக்கிலிட முடியாது'' —என நீதிமன்றத்தில் மரண தண்டனை விதித்த போது மார்தட்டிக் கூறிய மறவன். அழகிய புன்முறுவலும், அடங்காத புரட்சி உணர்வும் தாங்கிப் புறப்பட்ட இந்த அடலேறு சிங்களச் சிறைக் கூட்டில் கொடியோரால் கொடூரமாக வெட்டிச் சாய்க்கப்பட்டான்.

## சிவசுப்பிரமணியம்



என்கின்ற

## தேவன்

● தலைவர் தங்கண்ணாவின் மெய்ப்பாதுகாவலன். பட்டாளத்து மேஜரைப்போல நெடிய கம்பீரமான தோற்றம். ஜெகனைப் போலவே போலீஸ் இராணுவப் பிடிகளிலிருந்து சாதுரியமாகத் தப்பிய சாகசங்கள். போலீசாரின் துப்பாக்கிக்குண்டினை வயிற்றில் தாங்கிக் கொண்டே கடலை நீந்தித்தாண்டித் தப்பிய மனோ வைரம். களமாடிய வேழமாயினும், செந்நிற மேனியும், சிரித்த முகமுமாக — நளினமும் நகைச்சுவையுமாக—நடமாடிய தேவன், அரசாங்க பதவியை உதறி எறிந்துவிட்டு போர்க் களத்திலே புகுந்தவன். மணமாகாதவர்.

● நவரத்தினராஜா சிவபாதம்— ''மாஸ்டர்'' என்று தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்ட இப்போராளி விடுதலைப் பாசறையின் ''வெளிக்கள'' வித்தகர். அரசாங்க சேவையிலிருந்து கொண்டே இக்களத்தில் அற்புதமாகச் செயல்பட்ட சிந்தனையாளர். மணமாகாதவர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• **முத்துக்குமார் சிறிக்குமார்**—உருக்கு நெஞ்சமும், உணர்ச்சி வேகமும் கொண்ட உரும்பிராய் மண்ணிலே உருவான காளே. விடுதலைப் போராளிகளின் விசேட ஒற்றர். காதல் திருமணம் செய்து கொண்ட இவருக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர்.

• **செல்லச்சாமி குமார்**—தளபதி குட்டிமணியின்மீது தாளாத அபிமானம் கொண்ட உண்மைத் தொண்டன். தன்னைப் பற்றி கவலை வேண்டாம், தளபதியின் உயிருக்கு சிங்கள வெறியரால் ஆபத்து என அடிக்கடி வழக்கறிஞர்களிடம் நச்சரித்தவன். பசுப்போன்ற பாவனையும் வேங்கைப் பாய்ச்சலும் கொண்ட இந்த விடுதலை வீரனுக்கு மனைவியும் இரு குழந்தைகளும் உள்ளனர்.

• **பிலிப் குமாரகுலசிங்கம்**—செல்வக் குடும்பத்திலே பிறந்தவர், தொழிற்சாலை அதிபர். விடுதலைப் போராளிகளுடன் தோழமை பூண்டவர். அவர்க்குத் துணை நின்றவர். சித்திரவதையும் சிறைவாழ்வுமாக தன் வாழ்வை அர்ப்பணித்தவர். மணமானவர்.

• **மரியாம்பிள்ளை**—முன்னாள் போலீஸ் சார்ஜண்ட். விடுதலைப் போராளிகளுக்கு அடைக்கலமும், ஆதரவும் தந்தவர், போலீஸ் இராணுவக் கொடுமைகளுக்கு மத்தியிலும் போலீஸ் மிடுக்குடன் தலைநிமிர்ந்து பேசியவர். இதனால் மேலும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர் மனைவியும் ஒருமகனும் உளர்.

இன்னோரன்ன படுகொலைகளுக்குள்ளான மறவர் அனைவருக்கும் எமது இயக்கம் தலைதாழ்த்தி வீர வணக்கம் செலுத்துகிறது. உங்களைப் பலி கொண்ட சிங்கள வெறியருக்கெதிராக பழி துடைப்போம் என்ற வீர சபதத்தை ஏற்கிறது.

"மலர்க தமிழ் ஈழம்"

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

**(TELO)**

**BRANCH OF FRANCE**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்